DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT COURT, ERODE.
**O.S.No.51/2017**

Deposition of Witness : DW.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வகுமார் | த/பெ. | : | ராமசாமி |
| கிராமம் | : | பாலமேட்டுப்புதூர் | தாலுகா | : | கொடுமுடி |
| தொழில் | : | விவசாயம் | வயது | : | 67 |

<u>Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 09-07-2025.</u>

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை ( சாட்சி வழக்கறிஞரால் அடையாளம் காட்டப்பட்டார்)</u>

நான் 2ம் பிரதிவாதி கலைச்செல்விக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேனா என்றால் ஆமாம். நான் வசித்து வரும் வீட்டிலிருந்து சுமார் 13 கிமீ தூரத்தில் வழக்கு சொத்து உள்ளது. எனக்கு விவசாயம் மட்டும் தான் தெரியும். நான் சிவகிரி, சக்தி பைனான்ஸ்ல் நிர்வாக பங்குதாரராக செயல்பட்டு வருகிறேன் என்றால் தவறு. அந்த சக்தி பைனான்ஸ்ல் மொத்தம் 14 பங்குதாரர்கள் இருந்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் வருமானவரி செலுத்தும் நபரா என்றால் இல்லை. வருமானவரி செலுத்தும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்பதால் நான் வருமானவரி செலுத்துவதில்லை என்றால் சரிதான், நான் விவசாயம் தான் செய்துவருகிறேன். வழக்கு சொத்தை சர்வேயரை வைத்து நான் அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே இருந்த பத்திரத்தை அனுசரித்து நான் பத்திரம் எழுதிக்கொண்டேனா என்றால் ஆமாம். அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி கிரையம் எழுதப்பட்டதா என்றால் ஆமாம். அரசு வழிகாட்டி மதிப்பு என்பது வேறு, சொத்தின் சந்தைமதிப்பு வேறு என்றால் அரசு வழிகாட்டி மதிப்புப்படி ஆவணம் எழுதப்பட்டது. சந்தைமதிப்பு என்னவோ அதற்கான பணத்தை கொடுத்து நான் ஆவணம் எழுதிக்கொண்டேன். அரசு வழிகாட்டிமதிப்பை சார்பதிவாளர் அலுவலகத்தில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அரசு வழிகாட்டி மதிப்பை ஆவணஎழுத்தர் பார்த்து அதன்படி அவர் ஆவணம் தயார் செய்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் தார்சு கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். தார்சு கட்டிடத்தை தவிர வழக்கு சொத்து வேறு கட்டிடங்கள் ஏதெனும் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ரசீதானது தாவா சொத்தின்

14-08-2024 தேதியிட்ட சொத்து வரி ரசீது என்றால் சரிதான். 14-08-2024 தேதியிட்ட அந்த சொத்துவரி ரசீது **வாசாஆ.40 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் இரண்டு மின் கட்டண ரசீதுகள் வழக்கு சொத்திற்கு மின் கட்டணம் செலுத்தியதற்காக வழங்கப்பட்டவைகள் என்றால் சரிதான். அந்த இரண்டு அசல் மின் கட்டணரசீதுகள் **வாசாஆ.41 ஆகும்.** மின் இணைப்பு யாரால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதோ அவரால் மின்கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் நான்தான் மின்கட்டணம் செலுத்தி வருகிறேன். என்பெயரில் உள்ள பத்திரத்தை கொடுத்து மின் இணைப்பு மற்றும் சொத்துவரி ஆகியவைகளை எனது பெயரில் மாற்றம் செய்து கொண்டேன் என்றால் சரிதான்.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

II Addl. District Judge, Erode.